முரசொலி

வார இதழ்

ஆசிரியர் மு. கருணாநிதி

முரசு 3 | 18-5-56 | வெள்ளி | ஒலி 7

விருது பெறும் வீராங்கனை!

பத்ம விபூஷணி பட்டமல்ல; ஏழெட்டு ராகங்களை ஆலாபனை செய்துவிட்டு ராஷ்டிரபதியிடம் கோலாகலமாய் கைகுலுக்குவதற்கு!

பத்து குழந்தைகளைப் பெற்று வளர்க்கும் தாய்க்கு மேலை நாடுகளிலே தரப்படும் கௌரவப் பட்டமுமல்ல!

வீராங்கனை என்ற விருது—புறநானூற்றுத் தாய் என்னும் பெருமை—சாமான்யத்தில் கிடைக்கக் கூடியதா? சமர் முனை பலவற்றைக் கடக்க வேண்டுமே; தமர், பிறர் என்ற பேதமின்றி தாயக சேவை புரிய வேண்டுமே! 'எவ்வளவு நோன்பிருந்தாளோ; எவ்வளவு தியாகம் செய்தாளோ இத்தகைய பேறு பெறுவதற்கு!' என தாய்க்குல மக்களெல்லாம் நினைக்குமளவுக்கு தன்னிகரற்றுத் திகழும் பெருமதிப்பு—திராவிடர் இயக்கம் மாநாடு கூட்டி, மக்கள் முன்னிலையில் அளிக்கும் முதல் மரியாதை, மூவலூர் மூதாட்டி இராமாமிர்தத்தம்மையாருக்குக் கிடைக்கிறது.



ஆற்றலரசன்; அருந்திறல் முடிப்போன்; தூற்றல் கணைகளை துச்சமென நினைப்போன்—தோழர் மதுரை முத்து. மாநாட்டுச் செயலாளருள் ஒருவர்.

ஆமாம்; திராவிட முன்னேற்றக் கழகம் மங்கையர் குலத்திற்கும், மறத்தமிழர் இனத்திற்கும் அம்மையார் செய்த தொண்டினைப் பாராட்டி, இது போன்ற துறைகளுக்கு மேலும் மேலும் பல பெண்மணிகளை ஊக்குவிப்பதற்கும், தள்ளாத வயதிலும் வாலிப நங்கையருக்கு இல்லாத உற்சாகத்தினை அம்மூதாட்டியார் பெற்றிருப்பதைக் கௌரவிப்பதற்கும் விருது வழங்கப் போகிறது. திருச்சி மாநாட்டிலே, அலைகடலுக் கொப்பான மக்கள் முன்னிலையில், மகிழ்ச்சி எக்காளம் வானைக் கிழித்திட, 'புலிப் பல்லைப் பரிசாகப் பெற்று மலைத் தோளனுக்கு மாலையிட்டு மகிழ்ந்த மங்கையர் இனமே! இன்று எலியைக் கண்டு கிலி கொள்ளும் நிலைக்கு ஆளாகி நிற்பது ஏன்? ஏன்?'—என்று கேள்விக்கணைகள் எழுந்திட, அறிஞர் அண்ணா அவர்கள் அந்த வீர விருதினை வழங்கப்போகிறார்கள்.

முறத்தாலே புலியை எதிர்த்த மறத்தி இனம்! முதுகிலா காயம் பெற்றான்? அவன் பால் குடித்த மார்பினை அறுத்தெறிகிறேன்—என்று கடுஞ்சபதம் கொண்ட காரிகையின் வழித் தோன்றல்! தமையன் மறைந்தான்; காதலன் இறந்தான்; கண்ணே, குமாரா! நீயும் செல்லடா போருக்கு—என மண் வீடு கட்டி மரப்பொம்மை வைத்து விளையாடிய மழலையிடம், தீட்டிய கூர் வாளைக் கொடுத்து, போர்முனை காட்டிய வீரத்தாய் வர்க்கம்!

—அவ்வழி வந்தவர் நல்வழி காட்டிடும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் விருதுக்கு உரியவராகிறார்.

விருதினால் வீராங்கனை பெருமையடைகிறார்; அவருக்கு விருது வழங்குவதால் கழகம் பெருமைப்படுகிறது. ஆமாம்; இன்னும் சில ஆண்டுகளிருந்து அவர் மறைந்தால், மூதாட்டியாரை நாம் கௌரவித்தோமில்லை—என்ற அவச்சொல் நம்மைத்தானே சாரும்! இப்போது அது இல்லை—கழகம் தொண்டுக்கும தியாகத்துக்கும் தரும் மதிப்பினை, நேரம், இடம், அறிந்து தந்த பெருமை பெற்றிருக்கிறது!

எழிடம் வந்தார்; இடர்ப்பட்டார்; இழிநிலை அடைந்தார் என்பதில்லை: 'மக்களன்பு பெறுவோர் எல்லாம் பெறுவர்' என்பதனை எடுத்துக் காட்டி விட்டோம், நாம்!

மறத்தியர் இனத்திற்கு மூதாட்டியார் செய்திருக்கும் தொண்டுதான் எத்தகையது!

வீரனின் தோள் தழுவிய மங்கையரை விபசாரத்தின் தாள் தழுவ வைத்திருக்கிறதே சனாதன தர்மம்! விழுப்புண் தடவி, விழிக் கடையால் மதுக்கடை விரித்த மங்கையர் திலகங்களை, தேவரடியார்களாக, தாசிகளாக, வேசிகளாக, சமுதாயச் சாலையின் தூசுகளாக அல்லவோ ஆக்கி வைத்திருந்தது மனுதர்ம நீதி!

அதை உணர்ந்து, தவறிய நங்கையருக்கு திருத்தம் கூறும் நறுந்தொண்டு புரிந்தார், மூதாட்டியார்.

ஆயிரமாயிரம் தாசிகளின் கழுத்திலே கிடந்த 'பொட்டு' எனும் பெயர் பூண்ட விபசாரச் சின்னத்தை அறுத்தெறிந்திருக்கிறார்!

தாசிகளை ஒழிப்பதா? இளைஞர்கள் தங்கள் வாலிப வேகத்தை எப்படித் தணித்துக் கொள்வார்கள்?

—என்று சனாதனவாதிகளின் சார்பாக சத்தியமூர்த்திகள் சட்ட சபையிலே வாதாடிய காலம், அது!

அன்று உருவிய வாளுடன் 'பொட்டறுக்கப் புறப்பட்ட மூதாட்டியார் இன்றளவும் தன்னுடைய சமுதாயப் பணிகளைக் குறைத்துக் கொண்டாரில்லை!

அது மட்டுமல்ல; இந்தி எதிர்ப்பு போன்ற நம் இயக்கம் நடத்திய எல்லாக் கிளர்ச்சிகளிலும் கலந்துகொண்டு சிறைக்கூடத்தைப் பூந்தோட்டமாக்கிக் கொண்டிருக்கிறார்.

நரைமுதிர்ந்த உருவம்தான்—ஆனால் தாயகத்தின்மேல் படிந்திருக்கும் கறை கழுவ நினைக்கும்போது அவர் பள்ளிச் சிறுமியின் உற்சாகத்தைப் பெறுகிறார்!

தள்ளாடும் வயதுதான்; ஆனால் 'நாடு' என்று சொன்னதும் நிமிர்ந்து நிற்கும் நோக்கு கொண்டவராகிறார்!

சாவைப் பற்றிக் கவலைப் படாதவர்தான்; ஆனால் திராவிடத்து விடுதலைக்காகச் சாக வேண்டுமே என்பதில் பெருங்கவலை கொண்டிருப்பவர்!

திராவிடத்தாரின் தாய்; திராவிடத் தாய்க்கு மூத்த சேய்; ஏய்க்கும் சனாதன வாதிகளுக்கு உயிர் மருட்டும 'பேய்'; நமக்கோ வாய்மணக்கும் தேன்!

—அவர் விருது பெறுகிறார், பெருமிதத்துடன், பூரிப்புடன், புளகாங்கிதத்துடன்!

ஆனால் ஏனையோர் நினைக்கலாம், 'அண்ணாதுரை தரும் விருதுக்கு இவ்வளவு ஆர்ப்பாட்டமா' என்று!

அவர்களுக்கெல்லாம் கூறிக் கொள்ள ஆசைப்படுகிறோம்—

ஸ்டாலின் பரிசு!
லெனின் பதக்கம்!

—ரஷ்யாவிலே தரப்படும் இந்தக் கௌரவப் பட்டங்கள் குறித்து கேள்விப் பட்டிருப்பார்கள்.

இவர்தான் திருச்சி நகரசபை உறுப்பினர் நாகசுந்தரம் — மாநாட்டு வெற்றிக்கு உழைப்பவர்களில் ஒருவர்.

நாம் திருச்சி மாநாட்டினிலே மூவலூர் மூதாட்டியாருக்குத் தரும் விருதுச் சின்னம் வருங்கால சுதந்திரத் திராவிடத்திலே அத்தகைய மதிப்பினைத்தான் பெற்றுத் திகழும்!

இன்று இராமாமிர்தத்தம்மையார் பெறும் தி. மு. க. விருது நாளைய சுதந்தர திராவிட சமதர்மக் குடியரசின் 'ஸ்டாலின் பரிசு'! 'லெனின் பதக்கம்'!

திருவாரூரிலே பிறந்து, திராவிடர் அணியிலே சேவை செய்து, எழுபத்துமூன்று வயதினை அடைந்திருக்கும் அப் பெருநரைக் கிழவி நீடு வாழ எம் வாழ்த்துக்கள்! ∴

அறிஞர் அண்ணா

கலிங்கராணி	3	0	0
ரோமாபுரி ராணிகள்	2	4	0
கம்பரசம்	1	8	0
கபோதிபுரக் காதல்	1	0	0
இலட்சிய வரலாறு	1	0	0
ஆரியமாயை	1	0	0
குமரிக்கோட்டம்	1	0	0
உலகப்பெரியார்காந்தி	1	0	0
தீ பரவட்டும்	1	0	0
சிறு கதைகள்	1	0	0
வர்ணாஸ்ரமம்	0	12	0
நிலையும் நினைப்பும்	0	12	0
மே தினம்	0	5	0
பிப்ரவரி 20	0	4	0
அவர்கள் சாதிப்பு	0	3	0

நாவலர் நெடுஞ்செழியன்

காதற் காட்சிகள்	2	4	0
மதமும், மூடநம்பிக்கையும்	1	0	0
பண்டைக் கிரேக்கம்	1	0	0

மு. கருணாநிதி

இரத்தக் கண்ணீர்	2	0	0
ஆறுமாதக் கடுங்காவல்	2	0	0
நாளாயினி	1	0	0
பழக்கூடை	1	0	0
பரப்பிரம்மம்	1	0	0
விடுதலைக் கிளர்ச்சி	1	0	0
முத்தாரம்	0	12	0
பூந்தோட்டம்	0	4	0

திராவிடப் பண்ணை,
தெப்பக்குளம், திருச்சி.

'முரசொலி'க்கே உரிய தனிச் சிறப்புகளுடன்

அடுத்த இதழ்
மாநில மாநாட்டு
சிறப்பிதழாக
வெளிவரும்.

அதிகப் பக்கங்கள்! விலை அணா 3.

அதிகப் பிரதிகள் வேண்டும் விற்பனையாளர்கள் 19-5-56-க்குள் தெரிவித்துவிடவும்.

இவ்விதழ் மாநில மாநாட்டு தனி இதழாக வருவதால் 'வெள்ளிக்கிழமை' இடம்பெறவில்லை; அடுத்த வாரம் உண்டு.

★ ★ ★ குடித்திடுவோம் உயிர்;

சென்னை 18--5--56 வெள்ளி

'நல்ல காலம்!'

வாளை எடு—வாழ்வா? சாவா?—என்பதைப் பார்த்துவிடுவோம் என சூளுரைத்து சுடர் முகம் தூக்கியிருக்கும் தாள் வணங்காத் தமிழர் சேனை திருச்சியிலே திரண்டிருக்கிறது.

நாடு மீட்கும் மனமில்லாதார் நடமாடும் நடைப் பிணங்களென தீர்ப்பு சொல்லி, எமக்கு ஏற்புடைத்தெனக் கொண்டதை சாவே வரினும் செய்து முடிப்போம்—எனச் சங்கம் முழக்கி சமுத்திரம்போல் கூடிவிட்டார், நித்திரை மறந்து, நித்தம் நித்தம் தாயகமே மூச்செனக் கொண்டு விட்டோர்!

முடி மன்னர் மூவர் எங்கே? அவர் அடிபணிந்திருந்த ஆணவக் காவலர் எங்கே? திரை கொண்ட தேரும், அதை அடைய அவர் கடந்த இரத்தச் சேறும், கேட்டால் செவியூறும் வீர வரலாறும் எங்கே? எங்கே?—என்று கேட்டு, நடந்துவந்த பாதையைத் திரும்பிப் பார்க்கத் துவங்கிவிட்டார்கள்; கரும்பினும் இனியவளே! கட்டாணி முத்தழகி' நான் வெட்டிவந்த பகைவர் தலைகளின் எண்ணிக்கையைக் கேள்—என்று கணக்கு கொடுத்த காளையரின் சந்ததி பாளை முறிபட்ட தென்னைபோல், நாளை என்ன என்பதை எதிர்பார்க்க முடியாமல் வேலையும் வாளையும் இழந்து எதிரியிடம் சிக்கித் தவிக்கும் வீரனின் நிலையிலே வாடி வதங்குகின்றனர்; கையில் கிடைத்த ஆயுதத்தைக் கொண்டு மெய்யில் உணர்ச்சி இருக்கும் வரையில் போராடப் பரணி பாடுகின்றனர்—அந்த போர்க் கீதத்தைத்தான் பொதிகைத் தென்றலோடு சேர்க்கின்றது வள்ளுவர் நகரத்திலே நடைபெறும் வீரச் சொற்பொழிவுகள்!

மறக்குடியில் வந்தவனே! இமய வரைப்பினில் வீரத்தின் முத்திரை பதித்தவனே! அகிலமெல்லாம் கட்டியாண்ட அசகாய சூரனே! பாரடா உன்னைச் சுற்றியிருக்கும் உலகத்தை! சின்னஞ்சிறு டூனிஷ்யா சினவேங்கைப் புலியாக மாறியிருக்கிறது! மொராக்கோ நாட்டிலே முகிலைக் கிழித்து வரும் முழு நிலவு போல விடுதலைக் கதிர் கிளம்பிவிட்டது! ஆமையைப் போல் அடங்கிக் கிடந்த அல்ஜீரியா அடலேற்றைப் போல் நிமிர்ந்து நின்று, உம் நாவை அறுக்குமுன் எம் நாட்டைவிட்டு அகன்று விடு—என ஆணவக்காரரை நோக்கி அதிகாரக் குரல் கொடுக்கிறது. சிற்றெறும்பைப் போலிருக்கும் சைப்ரஸ் தீவு தாயகத்தோடு இணைய விடுதலைத் தானையை ஏவியிருக்கிறது. அய்யகோ, திராவிடா! நாடோடிகளாய்த் திரிந்த நாகர்களும் நாடு கேட்கிறார்கள். மானமொன்றே நல்வாழ்வெனக் கொண்டவனே; இன்னுமா உன் மயக்கம் தெளியவில்லை? இன்னுமா உன்னைக் கப்பியிருக்கும் ஏக பாரத மாயை அகலவில்லை? எழுந்து நில்லடா என் கண்ணே! விழிகளைத் திறந்து பார். செவிகளைத் தீட்டிக் கேள். அங்கெல்லாம் கவிபாடும் குயிலும் 'சுதந்தரம்' 'சுதந்தரம்' எனக் கொக்கரிக்குதேடா! மிளகையும் மயிலிறகையும் யவனத்திற்கனுப்பி மேதினியின் கவனத்தைக் கவர்ந்தவனே! உதவாதினி ஒரு தாமதம்; உடனே செயற்படு. கயல்விழி மாதரின் கட்டிலே கிடந்தது போதும்; மட்டில்லாப் புகழ் கொண்ட நாட்டுக்குச் சேவைசெய்ய புறப்படு! இராமன் ஆண்டால் என்ன, இராவணன் ஆண்டால் என்ன—என்ற இழிதகை எண்ணம் வேண்டாம். பழந் தமிழா! பழி வந்து சேர்ந்ததடா உன்னினத்தில். இனி இராவணன்தான் ஆளவேண்டும்; இராமன் அழியத்தான் வேண்டும்—என ஆழ்கடல் அதிர ஆரவாரம் எழுப்பி கடாரம் வென்ற உன் சைன்யத்தைத் திருப்படா திருப்பு—இவ்வாறெல்லாம் திருச்சியிலே திராவிடத்தின் எழுச்சி வீணையை மீட்டுகின்றனர் நாடு காக்கும் நல்ல தம்பிகள்!

கூலிகளாய், கொத்தடிமைகளாய் ஈழத்துக்குச் சென்றிருப்போர்—பர்மாவின் ரப்பர் காடுகளிலே இரத்தத்தைத் தத்தம் செய்வோர்—அனைவரும் கூடியிருக்கிறார்கள், வள்ளுவர் நகரத்துக் கொலு மண்டபத்தில்!

கதருடை அணிந்து, தமிழரில் பதராய் நடமாடும் பலரும் வந்திருக்கின்றனர், அங்கே!

அவர்களெல்லாம் வீழ்ந்த இனத்தின் வெற்றி விருதுகளை கற்பனை விழிகளால் பருகின்றனர்.

புலிக் கொடி கொண்டவன் புறமுதுகிட்டது ஏன்? விற்கொடி வளைந்தது எவ்விதம்? கயல் ஏன் கவிழ்ந்தது?—என்பதற்கான காரணங்களை சிந்தனைத் தேரிலே சென்று காணுகின்றனர்.

புன் சிரிப்போடு வாழ்ந்தோமே; இன்று நெஞ்சிலே புண் பெற்று கண்ணிழந்து வாழக் காரணம் என்ன—என்று கேள்விக் குறிகளைக் கிளப்புகின்றனர்.

ஆமாம்; உதய சூரியன் உதித்துவிட்டான். குன்றெடுக்கும் நெடுந்தோளான் கொன்றொழிக்கும் கொடுவாளைக் கையிலேந்தி விட்டான். அன்றலர்ந்த ரோஜா எங்கள் அன்னை நாடு; அதை எம் கண் கலங்க கசக்கி எறிந்திடும் கசடரே—பாய்ந்து வருகுது பாசறை வல்லோன் பாணம்; குளிர்ப் பிணமாய்ச் சாய்ந்து வீழ மனமுள்ளோர் எதிர் நிற்பீர்; மற்றையோர் ஓடுங்கிடுவீர்! ஓடிடுவீர்!—என வடநாட்டு ஆதிக்க பீடத்தை நோக்கி எம் தோழர்கள் எழுப்பும் இடிக்குரல் ஒலிக்குது, முன்னிலும் பன்மடங்கினதாய். பலம் பொருந்தியதாய் எனக் கேட்கும் போது செவிகளிலே தேன் பாய்ச்சப் பெற்று, பிறவிப் பயன் பெற்றவர்களைப் போல் புளகாங்கிதம் கொள்கிறோம்.

ஆஸ்திகர் மொழிப்படி சொல்லப்போனால் நல்ல காலம் பிறந்துவிட்டது நம்மினத்திற்கு!

புறங்காணப் பெரு நாட்டான் கேடு துயில் நீங்கி விடுதலை கானம் பாடி வருகிறான்! கோடுயர் வேங்கடப் பெருமலை கொண்டோன் நாட்டின் கேடுகளையக் கேடயம் ஏந்திவிட்டான். ஓடையிலே விடுதலை வெள்ளம்! திராவிடன் ஆடையிலே விடுதலைச் சின்னம்! பேடையுடன் உடல் மோதும் போதும் விடுதலை எண்ணம்' பாடையிலே போவோனும் பாடம் எழுதியிருக்கிறான் விடுதலை திண்ணம்! திண்ணம்!!—என்று! எங்கணும் விடுதலை வேகம்! எங்கெங்கு காணினும் விடுதலை மோகம்! இதுதான் நாம் தணித்திட நினைக்கும் இலட்சியத் தாகம்!

—திருச்சி ஊட்டும் இந்தப் புதிய உணர்ச்சியிலே திராவிடத்தின் புதிய சமுதாயம் பூக்கட்டும்! பூத்து புதுமணம் கமழட்டும்!—என வாழ்த்துகிறோம்!

★

மாநாட்டுப் பணிபுரிய 'மாநாடு' கூட்டியிருக்கும் தோழர்கள்—
பராங்குசம், அம்பில் தர்மலிங்கம், மணி.

கொடுத்திடுங்கள் நாட்டை! ★

அன்புள்ள பொன்முடி !



ஏறத்தாழ இரண்டு வருடகாலமாக எனக்கு வரும் கொள்கை விளக்கக் கடிதங்களுக்குக் கூட நீயே பதில் எழுதி எனக்கு சற்று ஓய்வளித்ததோடு--உள்ளத்திற்கு உற்சாகத்தையும் வழங்கி—வாரந்தோறும் கடிதங்கள் மூலம் என்னைக் குடையும் குமார் போன்ற நண்பர்களுக்கும் அவ்வப்போது பதில் தீட்டி — எல்லாவற்றுக்கும் மேலாக 'முரசொலி'யின் ஒரு பக்கத்தையும் உன் தித்திக்கும் எழுத்துக்களால் நிரப்பிக் கொண்டிருந்தாய்.

உன் குடும்பத்தில் விளைந்த திடீர் மாற்றங்கள் என்னிடமிருந்து உனைப் பிரித்ததோடு—அடிக்கடி கண்டு மகிழவும் இயலாதபடி சென்னை மாநகரத்திலிருந்து வெகு தூரத்திற்கு அப்பால் -பிறந்த பொன்னாட்டில் பிழைக்க வழியின்றி, உழைக்க வகையின்றி, கடல் கடந்து செல்லும் தமிழருக்கு கரங்கொடுத்து ஆதரிக்கும் மலேயா நாட்டிலே கொண்டு போய் உன்னை சேர்த்தும் விட்டன. நீ எங்கிருந்தால் என்ன; பொங்கி வரும் புதுவெள்ளத்தை வரவேற்றுப் புரட்சி விதைக்கும் அறிவியக்க உழவர்களில் ஒருவனாகவே நீ என்றும் இருப்பாய் எனபதிலே எள்ளத்தனையும் எனக்கு சந்தேகமில்லை.

அவர் சொன்னார், இவர் சொன்னார் எனறோ; ஆயிரத்தைக் காட்டினார்—பதினாயிரத்தை நீட்டினார் எனறோ மழுப்பல் மொழி பேசி — கட்டிக் காக்கும் கொள்கையிலேயிருந்து இம்மியும் பிசகி நடக்கமாட்டாய் எனறு எனக்கு நனறாகத் தெரியும். உன் காத்திலேயுள்ள பேனா நம் சமுதாயத்துக்கு உலைவக்கும் எண்ணங்களை பகுத்தறிவுக் சழனியிலே களைகளாக முளைக்கவிட உதவுமென்று யாரும் கூற முடியாது. மலேயாப் பகுதிகளிலே வாழ்கின்ற தாயகத்தார் எழுச்சிபெற—அந்நாட்டார் நம் நிலை உணர—எழுத்தோவியங்களைத் தீட்டி வெளியிட முயற்சி யெடுபபாய் என்று நம்புகிறேன். ஆங்கு நடைபெறும் ஏடுகளில் உன் எழுத்துக்கள் மின்னட்டும்! கிழமை தோறும் இபலாவிடினும் உனக்கு ஓய்விருக்கும் போது 'முரசொலி'க்கும் கருத்துப் படையல் அளிக்கத் தவறாதே! நண்பனே! எவ்வளவோ ஆசைப்பட்டாய்; நமது மாநில மாநாடு வரையிலாவது தாயகத்தில் இருந்துவிட்டு பிறகு மலேயாசெல்லலாம் எனறு! முடியவில்லை உனக்கு விளக்கமுடியாத விபரீத விளைவுகள் உன்னை பலாத்காரமாக இழுத்துச் சென்று மலேயாவில் தள்ளிவிட்டன. கண் கலங்க என்னிடம் விடை பெற்றுக் கொண்டாய்! நானும் கலங்கினேன். நாமிருவரும் பிரிகிறோமே என்பதுகூட அல்ல; மாநாடு காணாமல் செல்கிறாயே- என்பதுதான இருவர் கண்களையும் குளத்து நிலையிலிருந்து ஆற்று நிலைக்குக் கொண்டுவந்து விட்டது !

அனபில், உடா தனிப் பண்பில், நல்லருந் தொண்டில் தன்னிகரற்ற தோழர் அப்பில் தர்மலிங்கம் — திருச்சி மாநாட்டு வரவேற்புக்குழுத் தலைவர்!

நேற்று உன் முகத்தைக் கண்டதுபோல் உன் முடங்கலைக் கண்டேன் திருச்சியிலே கூடப் போகும் விடுதலைச் சேனையைக் காணும் பாக்கியத்தை என் விழிகள் காணவில்லையே என்று எழுதி யிருக்கிறாய்; ஏங்கியிருக்கிறாய். கவலைப்படாதே! நான் மாநாட்டு நகரை உன் விழிகளால் காண்பதாகவே எண்ணிக் கொள்; அந்த அளவுக்கு நகரின் எழில் பற்றி உனக்கு விவரிக்க இருக்கிறேன்.

இன்று மே 16-ம் நாள்! மாநாட்டின் முதல்நாள் நிகழ்ச்சி ஆரம்பமாகி விட்டது! அருமைப் பொதுச்செயலாளர் நெடுஞ்செழியன் அவர்களை திருச்சி புகைவண்டி நிலயத்திலே ஆயிரமாயிரம் தோழர்கள் சூழ்ந்து நின்று வரவேற்ற காட்சி கண்கொள்ளாக் காட்சி!

பகை மிரட்டும் உருவோடும்—படை திரட்டும் பாங்கோடும்—புன்னகை கொட்டும் முகத்தோடும்—பொதுச் செயலாளர் புகை ஊர்தியிலிருந்து இறங்கினார். இறங்கியவர் உடனே மறைந்தார்; மாயமாய் அல்ல! மாலைகள்! பூச்சொரிந்து வரவேற்றனர், நாவலரை, நாட்டு விடுதலை வீரர்கள்! இன்னும் சிறிது நேரத்தில் பொதுக்குழு கூட இருககிறது. கழகத்தின் கடமை, கண்யம், கட்டுப்பாடு இவைகளின் அடிப்படையிலே தீர்மானங்கள் நிறைவேற்றப்பட இருக்கின்றன. கழகம் ஒரு ஜனநாயக அமைப்பு எனபதை விளக்கிடும் விதத்திலே தீர்மானங்கள் உருவாக இருக்கின்றன. கொள்கையிலே சிறிது பிறழ்ந்த பெரியாரையே விட்டுப் பிரிந்து பேரியக்கம் கண்டு, கொள்கையின் மாற்று சிறிதும் குறையாத இலட்சியக் குன்றுகளாம் இயக்க மாவீரர்களை இணைத்து நடத்தும் தி. மு. கழகத்தின் பொதுக்குழு கூடுகிறது என்றால் சிறிது அச்சத்தோடுதான் நோக்குவர்; நம் இலட்சியத்தை முறிக்க நினைப்போர்! அவருக்குத் துணைபுரிவோர்— அத்துணைவர்களைத் தூய்மைநிறை அரசு கட்டிலில் அமர வைத்து அந்த பீடத்தையே களங்கப் படுத்துவோர்—கனம்களாக இருப்போர் — வாழையடி வாழையாக வாய்க்காதா இந்த மந்திரிப் பதவி யென வாய் பிளந்து வானம் பார்த்த உழவன் போல நிற்போர் — அனைவருமே !

கழகத்தின் பொதுக் குழுவிலிருந்து கிளம்புகிற தீர்மானங்களில் எத்தகைய தீப்பொறிகள் ஜுவாலை விட்டுக் கிளம்புமோ என்று அடிவயிற்றில் நெருப்பைக் கட்டிக் கொண்டிருக்கும் அதிகார வெறியர்களைத்தான் நீ அறிவாயே; பொன்முடி !

அச்சங் கொண்டோர் — அழித்து விடக் கறை காண்போர்-அலட்சியத்தால் நம்மை சாய்த்துவிடக் கருதுவோர் - எல்லோருககும் படிப்பினை



திராவிடர் முன்னணியின் முதல்வர்—இவர்தான் திருச்சி மாநாட்டின் தலைவர்!

புகட்டும் தன்மையிலே தீர்மானங்கள் வெளிவரும் என்று நீ நிச்சயமாக நம்பலாம்! இன்றில்லாவிட்டால் நாளை; நாளை தவறினால் மறுநாள்-இலட்சிய வீரர்கள் ஜெயித்தார்கள் என்றுதான் சரித்திரம் இருக்கிறதே தவிர, போலிகள்—அடிமைப் பொதி மாடுகள்—அடக்குமுறை வேல் தாங்கிய அநியாய சொரூபங்கள்-வென்றார்கள் என்று வரலாறு கிடையாது அல்லவா? அந்த நன்னம்பிக்கையோடு தான் நாடு மீட்பதற்கேற்ற வகையிலே நமது பொதுக குழுவிலே தீர்மானங்கள் வர இருக்கின்றன.

பொதுச்செயலாளர் வரவேற்புக்கும் பொதுக்குழு நடைபெறும் நேரத்திற்கும் இடையிலே கிடைத்துள்ள இந்த சிறு ஓய்வுப் பொழுதில் இந்த மடலை உனக்கு எழுதுகிறேன. பதின்மூன்றும் நாளிலிருந்து வள்ளுவர் நகரை நான் கண்டு வருகிறேன் என்றாலும், இன்று காணும் வனப்புக்கு ஈடாக அவைகளைச் சொல்ல இயலாது. நேற்றுவரையிலே வேலி போடப்பட்ட அழகான கொல்லையிலே செடிகளும் கொடிகளும் மட்டுமே இருந்தன — இன்றோ பல வண்ண மலர்கள் பூத்துக் குலுங்குகின்றன! இத்தகைய ஒரு காட்சியைத்தான் மாநாடு எனக்கு மனக்கண்முன் நிறுத்துகிறது! கட்டபொம்மன் கோட்டைகளைப் பற்றி கேள்விப் பட்டிருக்கிறாய்; படித்துமிருக்கிறாய் அல்லவா; அந்தக் கோட்டையை இதயத்திலே நிறுத்திக் கொள்! இரு விழிகளையும் மூடிக்கொள்! என் விழிகளால் பார்! மாநாட்டு முகப்புகள் உனக்குத் தெரியும். சென்னைக் கண்ணபிரானும், புரட்சி நடிகரும் சேர்ந்தமைத்த சிங்காரமான முகப்பு! வேறு யாரிடம் ஒப்படைக்கப் பட்டாலும் இவ்வளவு குறைந்த செலவில் இப்படியொரு பிரம்மாண்டமான கோட்டை வாயிலை அமைக்கத்தான் முடியாது! கழகத்தின் வலிமையை தனது கம்பீரத் தோற்றத்தின் மூலம் விளக்கிக் கொண்டிருக்கும் அந்த நுழைவு வாயிலிலே, அணி அணியாக, எறும்பு வரிசை போல-ஆனால் இரும்பு இதயங்கொண்டோர்—புகுந்திடும் காட்சியை என்னால் வர்ணிக்க இயலாது! நீ இங்கிருந்து நான் மலேயாவில் இருந்திருந்தாலும் இப்படித்தான் கஷ்டப் படுவாய்; எப்படி வர்

30 4-56 அன்று செம்பனார்கோயிலில், ஆசிரியர் மு. க., தோழர்கள் சி. ஐப்பு, என். கிட்டப்பா—ஆகியோர் கலந்துகொண்ட பொதுக்கூட்டத்தில் ஒரு பகுதி!

ணிப்பதென்று!

திருச்சி நகர் முழுவதும் வீதி தோறும் அலங்கார வளைவுகள்—சிங்காரச் சிறு பந்தர்கள்! அவைகளிலே தமிழகத்து முக்கனிகள் வரிசை வரிசையாகக் கட்டப்பட்டிருக்கின்றன! குளோப்களும், லஸ்தர்களும் கொலு மண்டபம் போன்ற தோற்றத்தை மாநாட்டுத் தலைவர் மேடைக்கு வழங்குகின்றன. திருச்சியே விழாக் கோலம் கொண்டிருக்கிறது என சுருக்கமாகச் சொல்லி விடலாம்.

சிலப்பதிகாரத்திலே படித்திருக்கிறோமே; மருவூர்ப்பாக்கம், பட்டினப் பாக்கம் போன்ற பகுதிகளின் சிறப்புக்களை—செழிப்புகளை! அது போன்ற சீர் நல்கும் பகுதிகள்—கடைத் தெரு வென்ன; கண்காட்சிசாலைகள் என்ன—அப்பப்பா—சிடீரென்று இப்படி ஒரு நகரை நிர்மாணித்தவர்கள், ஏனய்யா திராவிடத்தையும் நிர்மாணித்துவிட மாட்டார்கள்!—என்று நகர் முழுதும் பேசிக் கொள்கிறார்கள். மாநாட்டுப் பந்தலைச் சுமந்து நிற்கும் மூங்கில் தூண்கள் எல்லாம் ''கொள்கை விளக்க'' அட்டைகளைத் தாங்கி நின்று பெருமையடைகின்றன.

இரு சிங்கங்கள் எழுந்துநின்று கர்ஜிக்கும் தோற்றத்திலே! அதைக் காணும்போது நமக்கு அண்ணா-நெடுஞ்செழியன் இருவரையும் நினைத்துக்கொள்ள வேண்டும் போலிருக்கிறது! கீற்றாலே உள் மண்டபம் ஒன்று! தஞ்சை மாவட்டத்திலே யிருப்பவர்கள் எத்தகைய கலை நுணுக்கம் வாய்ந்தவர்கள் என்பதை தலை நிமிர்ந்து சொல்லிக்கொண்டிருக்கிறது அந்த முகப்பு மண்டபம்! பகலை, இருட்டாக்கிக் காட்டும் பந்தல்! இருண்ட வானத்திலே ஒளி விடுபவை நட்சத்திரங்கள் என்போம்; ஒரு நிலவு என்போம்-ஆனால் ஆற்றல்மிகு ஆயிரமாயிரம் நிலவுகளைப் பிடித்துத் தொங்கவிட்டிருக்கிறாரோ; என எண்ணத்தக்க வகையிலே மின்சார விளக்கு அலங்காரம்!

வள்ளுவர் உருவம் — விடுதலை வீரர்களுககு வெறி வழங்கும் தோற்றத்தில்! ஒரு தனி மண்டபத்தில் புத்தரின் சிலையொன்று; புத்தருக்கு விழா எடுக்கும் வேளையில் மிகமிகப் பொருத்தமாக அமைந்திருக்கிறது, மற்றொரு மண்டபத்தில்! புத்தருக்குப் பெருமையளித்து, அவர் தம் போதனைகளைக் கடைப் பிடிக்க வழியுரைக்கும் உண்மை இயக்க மன்றோ நமதியக்கம்! யார் யாரோ புத்தர் பற்றி பேசுகிறார்கள்; எழுதுகிறார்கள் — விழா எடுக்க வேண்டுமென்றும் கூறுகிறார்கள்? அவர்களிலே பலர் வியாபார நோக்க முடையோர் என்பதை நீ அறிவாய்!

திரை நட்சத்திரங்களின் கையிலே வண்ணச் சேலைகளைக் கொடுத்திருக்கும் விதமாக ஓவியங்கள் தீட்டி ஜவுளி வியாபாரம் நடத்துகிறவர்களை நாம் கண்டிருக்கிறோம்.

ஆட்டுக் குட்டியைத் தோளிலே சுமந்திருக்கும் புத்தர் உருவத்தை வாசலிலே வைத்து கசாப்புக் கடையோ — 'மிலிட்டெரி ஹோட்டலோ' — நடத்துகின்ற வியாபாரிகள் தோன்றினும் ஆச்சரியமில்லையல்லவா? அப்படிப் பட்ட அசல் வியாபாரிகள் தோன்றவில்லையே தவிர, அரசியல் வியாபாரிகள் தோன்றியிருக்கிறார்கள் என்று நீ சொல்வாய்! உண்மைதான்! புத்தர் பற்றிப் பேசுகிற பூமான்கள் சிலர் இந்து மதத்தின் பெயரால் பலிக் கொடுமைகள் நடைபெறுவதை அனுமதிப்பவர்கள்தானே! அண்மையிலே கூட ஒரு சிற்றூரில் யாகமொன்று நடத்தி, அதிலே ஆரியப் பார்ப்பனர் ஆடுகளை உயிரோடு தீயிட்டு, அதன் குடல்களை வறுத்து உண்டார்கள் — என்ற சேதியைப் பத்திரிகைகளில் கண்டோம்! அத்தகைய அக்கிரமக்காரர்களின் கையில் சிக்கியிருக்கும் புத்தரை விடுவிக்க வேண்டியது நமது கடமை! அப்படி விடுவிக்கப் பட்ட அந்த வீரர்தான் நமது மாநாட்டுப் பந்தலில் அமர்ந்திருப்பதுபோல் தோன்றுகிறது — அவ்வளவு அமைதி நிறைந்த அழகான சிலை !

புத்தரை யென்ன; வள்ளுவரையே, வஞ்சகரிடமிருந்து மீட்டிடும் வேலையில் ஈடுபட்டு அதில் பெரும் வெற்றியும் பெற்றிருப்பவர்களல்லவா நாம்! அந்த வெற்றியின் அறிகுறிதானே—வள்ளுவர் நகரம்!

கோடை வெயில் சூழ்ந்தெதிர்க்கிறது! அதை எதிர்க்கும் ஆற்றல பெற்றிருக்கிறது வள்ளுவர் நகர்' போர்க் களத்திலே தலைகள் உருண்டு கிடக்கும் காட்சிக்கு உவமை தேடுவோர், வள்ளுவர் நகரைச் சுற்றிலும் — அருந்தாமலும், அருந்தியும் இறைந்து கிடக்கும் இளநீர்களைப் பயன்படுத்திக் கொள்ளலாம். வெயிற் கொடுமை தெரியாதவாறு அத்தனை ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருக்கின்றன. பத்துப் பாடல் படித்திருப்பாயே நீ; அதில் ஒரு கட்டம் — முடத்தாமக்கண்ணியார் எழுதிய பொருநராற்றுப் படையில் வருகிறது:

கோடையின் வெப்ப மிகுதியால் தாமரை போன்ற மலர்கள் எல்லாம் தீய்ந்து விடும்; மரக் கொம்பர்கள் கருகி விடும்; மலையினின்றும் பிறக்கும் அருவிகள் வரண்டுவிடும்; மேகங்கள் கடல்நீரை முகக்கமாட்டா! இந்த வரண்ட காலத்திலும் நுரையைத் தலையிலே சூடிக் கொண்டுள்ள காவிரியின்

அணி அணியாய்ப் படை குவித்துப் பணிவிக்கும் செயல் வீரர் திருச்சி மணி — இவர் ஒரு செயலாளர்!

★ ★ ★ திருச்சி செல்வோம்! எழுச்சி பெறுவோம்!! ★ ★ ★

நீர்க்கரங்கள் நறைக் கொடியையும் நரந்தம் புல்லையும், அகிலையும், சந்தனத் தருக்களையும் நீராடுகின்ற துறைகள் தோறும் தள்ளி விட்டு, குளத்திலும் மருத நிலத்து ஊர்களிலும் புகும். நீராடும் பெண்கள் நீர் விளையாடுவர். நெல் அறுப்போர் நெல்மலை குவிப்பர். உழவர் தினமும் கடா விட்டு உழக்கி நெல்லைத் திரட்டுவர்.

வெம்மை பொழியும் வேளையிலேகூட காவிரி சிந்து பாடுகிறது. காவிரிக் கரையினர் தம் கடமையைப் புரிகின்றனர் என்று பத்துப்பாட்டு கூறுகிறது! பழந்தமிழர் வாழ்வைக் குறிப்பிடும் இந்தக் காட்சி — கடமையாற்றக் கூடியிருக்கும் நம்மனோர் அனைவரின் உள்ளத்திலும் புதிய எழுச்சியைத்தான் ஏற்படுத்துகிறது. கடும் வெயில்; அயினும் காவிரி பாய்கிறது. கடமையாற்றுகின்றனர் தமிழர் என்கிறார் முடத்தாமக் கண்ணியார்!

வள்ளுவர் நகரிலும் கடும் வெயில்; ஆனாலும் விடுதலை எண்ணங்களைச் சுமந்து வரும் கருத்துக் காவிரி பாய்ந்த வண்ணமிருக்கிறது. கடமை யொன்றையே மனதிற் கொண்டு உலவுகின்றனர் காளையர்!



29—4—56 அன்று திருவெண்காட்டில் ஒரு மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற்றது. ஆசிரியர் மு. கருணாநிதி, தோழர் என். எஸ். இளங்கோ ஆகியோர் பேசினர்.

இது முதல் நாள் நிகழ்ச்சி— அதுவும் துவக்க நிலை!

நாளைய தினம் பெரியதோர் ஊர்வல அணிவகுப்பு! திருச்சி சிந்தாமணியில் தொண்டர் படைத் தலைவர் நிற்பார்! அந்த அணிவகுப்பின் கடைசி வீரர் கொள்ளிடக்கரையினிலே நின்றிடுவார் — கடல்தான நுழைந்ததோ என வியந்திடுமாறு பட்டாளப் பவனி நடைபெறப் போகிறது! வீதி யெங்கும் அமைந்துள்ள "தோரண வாயில்"களை, "முத்துப் பந்தல்"களைக் கடந்து தோள வலிமிக்கத் தோழர்களின ஊர்வலம் வள்ளுவர் நகரை அடையும். அந்த ஊர்வலத்தில் மாவட்டவாரியாகத் தோழர்கள் தாங்கள் கரங்களிலே இருவண்ணக கொடியேந்தி வருவர்! எத்தனை ஆயிரம் கொடிகளோ? — எத்தனை லட்சம் தோழர்களோ? — நாளைசகு அது காண்பேன்! களிப்பேன்! என் விழியால் நீ காண உடன் ஓலை தீட்டுவேன் உனக்கு! 17-ம் தேதி மாலையிலே மூவலூர் மூதாட்டிக்கு தி. மு கழகம் தரும் விருதை அறிஞர் அண்ணா அவர்கள் அளித்து, அரியதோர் உரை நிகழ்த்த இருக்கிறார்கள். அதைத் தவறவிடத் தமிழகத்தில் உள்ளோர் நினையார்! அதனால் — நாளை 17-ம் நாள் கூட்டம் இருமடங்காகும்! 18-ம் நாளோ; பொதுச் செயலாளர் முழக்கமிருக்கிறது மும்மடங்காகும் கூட்டம்! 19-ம் நாள்...

வாக்கெடுப்பு நாள்! இந்த மாநாட்டிற்கே தனிப்பெருமை தருவது பொதுத் தேர்தலைப் பற்றிய நமது முடிவு என்னவென்று நாடு எதிர்பார்க்கும் நிலைதானே! மக்களிடத்திலே கருத்து பெற்று—அவர்களது முடிவை ஆணையாகக் கொண்டு செயலாற்றும் கழகம் நமது கழகம் என்பதை மெய்ப்பிக்கும் நிகழ்ச்சி 19-ம் நாள் மாநாட்டில் காணக் கிடைக்கும். கட்டணம் செலுத்தி வருவோரிடம் 'வாக்குச் சீட்டு' ஒன்று தரப்படும். அதில் தி. மு. கழகம் தேர்தலில் ஈடுபட வேண்டுமா, வேண்டாமா?— என்ற பிரச்சினைக்கு மக்கள் முடிவு தெரிவிக்கும் வகையில் "வேண்டும்" "வேண்டாம்" என்ற சொற்கள் குறிப்பிடப்படும். அவைகளின் எதிரே தங்கள் கருத்தைக் குறியிட்டுத் தெரிவிப்பார்கள் மக்கள்! எந்தக் கட்சியும் இது வரை செய்ய எண்ணாத முறை! ஜனநாயக முறை!

கழகத்தின் சொற்பொழிவாளர்கள் எல்லாம் பேசுகிறார்கள்! அருமையான தலைப்புகள்! அந்தத் தலைப்புகளிலே அவர்கள் இனியொருமுறை எங்கே பேசப் போகிறார்கள்; பேசினால்தான் இதுபோல் எழுச்சியோடு அமையுமா? — அமைந்தாலும் அனைவரும் ஒரே நாளில் பேசிடும் வாய்ப்பு கிட்டுமா?— அதனால் சந்தர்ப்பத்தை இழக்கமாட்டோம் என்று எண்ணிடுவோர் குழுமிடுவர்! வள்ளுவர் நகரில் மக்கள் வெள்ளம் வழிந்தோடும்! ஐந்தாம் நாள்; தீர்மானங்கள் — பொதுத் தேர்தல் பற்றிய முடிவு! — அறிஞர் அண்ணாவின வீர உரை — அறப் போர்ச் சொற்பொழிவு — திராவிடமே திருச்சியில்தானா எனப் பேசும் நிலைமையிலே கூட்டம் வரும்! புது வெள்ளம்—மணி மகுடம்—அட்வகேட் அமரன் — சுமைதாங்கி — கொள்கை சொல்லும் நாடகங்கள்! கலை விழாக்கள்!! இத்தனையும் காண இன்றைககும் — தவறினால் நாளைக்கும் — பயணம் புறப்படும் தோழர்கள் நாடெங்குமிருக்கிறார்கள்!

அவர்கள் எல்லாம் வந்திடுவார்! அணிவகுப்பில் சேர்ந்திடுவார்! அந்தக காட்சிதனை உனக்கு ஒன்றுவிடாமல் — 25-ம் நாள் இதழில் தருகின்றேன் — கவலைபபாடாதே!

உன் அன்புத்
தோழன்.

தானை அமைத்துத் தருக்கரிடம் போரிடும் தமிழர் பாசறையில் ஆணைப் படைக்கோர் அங்குசமாம் தோழர் பராங்குசம்!

தென்னகத்து மேடைதோறும் வெற்றிமுரசு கொட்டிவரும்

★ கொள்கை விளக்க ஓவியம்!

★ கொஞ்சு தமிழ்க் காவியம்!!

மு. கருணாநிதி எழுதிய

-: மணிமகுடம் :-

நூல் வடிவில் மாநில மாநாட்டில் கிடைக்கும்.

விவரங்கட்கு: முத்துவேல் பதிப்பகம், திருச்சி.



கம்பரும் வம்பரும் கலைச்துவிட்ட திராவிடத்தை தூய தொண்டினால் தூக்கிவிட நினைக்கும் தொண்டர் படைத் தலைவர் தோழர் ஷரீப்!

நாடு மீட்போம்; கேடு களைவோம்!

பிறைவானம் — சிலை — சீனக் கதை

"உலகத்தில் சாதியே கூடாது. இல்லை; இல்லை. இரண்டேயிரண்டு சாதிகள் மட்டும் இருக்க வேண்டும். ஆமாம்; ஒன்று ஏழை சாதி; மற்றொன்று பணக்கார சாதி!...அப்படித்தானே! ஹா...ஹா...ஹா..." —இப்படி அடிக்கடி சொல்லுவார் மன்னர்.

"ஆமாம்; ஆமாம்! அரசே, அழகாகச் சொன்னீர்கள்!" என்பார்கள், பக்கத்திலிருக்கும் சீமான்கள்.

அவர்களுக்கு அரசர்தான் 'ஆண்டவன்!' அவர் எது சொன்னாலும் அது கட்டளை! எப்படித் திட்டினாலும் அது வாழ்த்து! மன்னனைப் பகைத்துக் கொள்ள முடியுமா? பின் அவர்களின் கதி?

அந்த மன்னர் இருக்கிறாரே, அவர் மிகவும் மமதைக்காரர். எப்போதும் குடிப்பார்; கும்மாளம் போடுவார்; ஆடல்களை ரசிப்பார்; பாடச் சொல்லி கேட்பார். நாட்டு மக்களைப் பற்றி ... ஊஹூம்...அவருக்கு அந்த நினைவே வராது!

"அரசே! நீங்கள் எப்படி இருக்கிறீர்கள் தெரியுமா? அடடா! என்ன அழகு, என்ன பிரகாசம், என்ன கம்பீரம்!"

"உடையைப் பாருங்கள், கண்கள் கூசுகின்றனவே!"

"பின்னே என்ன? கிரீடத்தைப் பாருங்கள்; எல்லாம் உயர்ந்த ரத்தினங்கள்! உலகம் முழுவதிலும் சல்லடைபோட்டு பொறுக்கியவை!"

—இப்படி யாராவது அவரைப் பற்றி புகழ்ந்து கொண்டேயிருந்தால் அவருக்குப் போதும்! நாடென்ன; நாட்டு மக்களென்ன; அவர்கள் எக்கேடு கெட்டால்தான் என்ன?

அந்த மன்னருக்கு ஒரு மகன்–மிக மிக நல்லவன். அப்பாவின் குணம்—அவரது போக்கு— இவை அவனுக்கு பிடிக்கவே பிடிக்காது!

ஒரு நாள்...

நாட்டின் மூலை முடுக்கெல்லாம் ஒரே பரபரப்பு! அரண்மனை ஆட்கள் ஏதோ செய்தி அறிவித்துக் கொண்டிருந்தார்கள்; மக்கள் கூர்ந்து கேட்டார்கள்:

"நாட்டு மக்களே! உங்களுக்கெல்லாம் மகிழ்ச்சியான செய்தி! உங்கள் திறமையைக் காட்ட அருமையான சந்தர்ப்பம்! நம் மன்னருக்கு அடுத்த மாதம் பிறந்தநாள் வருகிறது. கோலாகலமான திருவிழா — குதூகலக் கொண்டாட்டம்! அன்று மன்னர் ஒரு பரிசு தரப்போகிறார். நன்றாகக் கவனித்துக் கொள்ளுங்கள்; அன்றையதினம், நீங்கள், மன்னர் இதுவரை பார்த்திராத அதிசயப் பொருள் ஏதேனும் கொண்டுவர வேண்டும். அவைகளில் எது மன்னரைக் கவருகிறதோ, அவரே பாக்கியசாலி! அவருக்கே பரிசு! மன்னரின் பரிசைப் பெற தயாராகுங்கள்! கவனமிருக்கட்டும் —இதுவரை மன்னர் பார்த்திராத பொருள் கொண்டுவர வேண்டும்!...வாழ்க மன்னர்!"

நாடெங்கும் இதே செய்தி! அரண்மனை உப்பரிகையிலே நின்று கொண்டிருந்தான் மன்னரின் மகன். அவன் காதுகளிலும் இந்தச் செய்தி விழுந்தது மக்கள் அனைவரும் தீவிரமாக யோசித்தார்கள். "என்ன பொருள் கொண்டு செல்வது? இதுவரை மன்னர் பார்க்காத பொருளாமே!...ம்...இது என்ன பெருந் தொல்லை!" என்று யோசித்தார்கள். அதே சமயம் மன்னர் மகனும் என்னவோ யோசித்துக் கொண்டிருந்தான்.

அந்த நாளும் வந்துவிட்டது!

நாடு ஒரே அமர்க்களப் பட்டது. எங்கும் ஒரே மகிழ்ச்சி வெள்ளம்!

அரண்மனை அலங்காரமாக இருந்தது. சபையிலே மன்னர் — ஒரே கூட்டம்!

மன்னர் பார்க்காத அதிசயப் பொருள்கள் ஒவ்வொன்றாகக் கொண்டுவரப்பட்டன!

"அரசே! பாருங்கள் இதை! ஒரு நாள் அல்ல; இரண்டு நாட்கள் அல்ல; இருபத்திமூன்று நாட்கள் கடலடியிலேயே வசித்து—மூழ்கி மூழ்கி எடுத்த முத்து! விலை மதிப்பற்றது! இதுவரை மன்னர் பார்க்காத பொருள்!" என்று சொல்லிக் கொண்டு ஒரு சீமான் வந்தான். ஒளி வீசும் முத்து ஒன்றைத் தந்தான். மன்னர் சிரித்தார்.

"அடடா! இதைப் பாருங்கள், ரத்தினப் பல்லக்கு! உலகத்தில் எந்த அரசருக்கும் கிடைக்காத பொக்கிஷம். இதுவரை மன்னர் பார்க்காதது!" என்றான் ஒருவன். இருபது பேர்கள் ஒரு பெரிய பல்லக்கைத் தூக்கி வந்தார்கள். விலை மதிப்பற்றதுதான்; மன்னர் 'ஓகோ' என்று சிரித்தார்.

அப்புறம் ஒரு மிகப் பெரிய காட்டுயானை, கைக்குள் அடங்கும் கண்ணாடி போன்ற துணி, தங்கக் காலணிகள், ஆயிரம் பழங்கள் கொண்ட ஒரே திராட்சைக் குலை— இப்படி என்னென்னவோ வந்தன; சேர்ந்தன; குவிந்தன; மன்னரின் முகத்தில் என்றுங் காணாத குதூகலத்தை வரவழைத்தன!

அப்போது...

ஒரு சிறுவன்—பரம ஏழையைப் போல் தோற்றம் கொண்டவன்— உள்ளே நுழைந்தான்.

"யாரவன்? பிச்சைக்காரன்! எங்கே வந்தான்? தள்ளு வெளியே!" என்று உரத்த குரல்கள் எழுந்தன! ஏக காலத்தில் ஏசின!

சிறுவன், "ஏன்? நான் போக மாட்டேன்! நான் மன்னருக்கு அவர் பார்க்காத பொருள் கொண்டுவந்திருக்கிறேன்" என்றான். எல்லோரும் கேலியாகச் சிரித்தார்கள்.

பையனின் பின்னால் ஒரு பெரிய பெட்டியை நான்கு ஆட்கள் தூக்கி வந்தார்கள். மன்னரின் முன்னே வைத்தார்கள். 'இவன் என்ன பொருள் கொண்டு வந்திருக்கப் போகிறான்' என்று வியந்தார்கள் எல்லோரும். கண்கள் எல்லாம் பெட்டியின் மேலேயே இருந்தன.

மன்னர் பெட்டிக்கு அருகில் ஓடி வந்தார், பைத்தியக்காரனைப் போல. "உள்ளே என்ன இருக்கிறதோ? என் கண்களை எப்படிப் பறிக்கப் போகின்றதோ!" என்று வாய் விட்டுக் கத்தினார். அத்தனை ஆனந்தம் அவருக்கு!

சிறுவன் மெதுவாகப் பெட்டியைத் திறந்தான். அரசர் ஆசையோடு பாய்ந்தார். பெட்டிக்குள் கையை விட்டார். வெளியே எடுத்தார். மறுகணம் 'ஐயோ' என்று அலறினார். அந்தப் பொருளை வீசி எறிந்தார். சபையிலிருந்த அத்தனை பேரும் அலறி எழுந்தார்கள். நேரே பார்த்தார்கள்! அங்கே கிடந்தது ஒரு பச்சிளம் சிசுவின் பிணம்!

மன்னர் துடித்தார்! 'அக்கிரமம்!' என்று உறுமினார்கள் சபையோர்! சிறுவன் சிரித்தான்!

"அரசே! ஏன் நடுங்குகிறீர்கள்? நன்றாகப் பாருங்கள்; இது நீங்கள் பார்க்காத பொருள்தானே! உண்ண உணவின்றி தாய்—ஆகவே பாலின்றி பிணமான பாலகன்! நீங்கள்பார்த்திருக்கிறீர்களாமன்னவா? வைர நகைகளையும், விலை உயர்ந்த அணிமணிகளையும், ருசியான உணவையும்தான் நீங்கள் பார்க்க வேண்டுமா? நீங்கள் மன்னர்—நாட்டின் தலைவர்— ஆகவே இதைப் பிணத்தையும் பார்க்கத்தான் வேண்டும்! இதைப்போல எத்தனையோ பிணங்கள் நாட்டில் தினம் தினம் விழுந்து கொண்டிருக்கின்றன. அவைகளையும் காணவேண்டும்; காரணத்தைத் தேடவேண்டும்; அதைக் களைந்தெறிய வேண்டும்! ஆனால் நீங்களோ...மன்னவா! உங்கள் கடமை என்ன? ஆட்சி நெறி என்ன? யோசியுங்கள்! அதோ, அந்தப் பிணத்தை— நீங்கள் பார்க்காத அதிசயப் பொருளைப் பாருங்கள்!... யோசியுங்கள்...அரசே...யோசியுங்கள்..."

சிறுவன் சபையை விட்டு ஓடிக் கொண்டிருந்தான்.

"கொல்லுங்கள் அவனை"—"வெட்டுங்கள் அவனை!"—என்று சபையோர் அலறினர். உறவிய வாளுடன் பாய்ந்தனர்.

"வேண்டாம்! நில்லுங்கள்!" என்று கத்தினார் மன்னர்!

சிறுவன் ஓடிவிட்டான்!

ஆனால், மன்னரின் மனதிலே கப்பிக் கிடந்த மமதையையுமல்லவா ஓட்டிவிட்டான்!

மன்னர் மாண்புள்ளவரானார். அவருக்குக் குவிந்த ஒப்பற்ற பொருள்கள் அனைத்தும் ஏழை மக்களின் இல்லங்களுக்குத் தரப்பட்டன!

ஏழைப் பையனாக வேடமணிந்து வந்து—மன்னருக்கு நீதி சொல்லிய அரச குமாரனும் மகிழ்ந்தான்!

அன்று முதல் நகர வாயிலில்— அரண்மனை முகப்பில்—அரியாசனத்தில் — மணிமகுடத்தில் — எங்கும் அந்த மாண்டுபோன சிசுவின் சிலை வைக்கப்பட்டது! ஆம்; அரசனைத் திருத்திய அந்தப்பிணத்தின் உருவே அரசமுத்திரையாகவும் ஆகிவிட்டது!

—சொர்ணம்—



"அப்பப்பா! மூளையே குழம்பிவிட்டது!" என்று முணு முணுக்கும் மாணவர்கள் பலரை நாம் பார்த்திருக்கிறோம்! கடினமான கணக்கு ஏதேனும் தரப்பட்டுவிட்டால், தலை கலைய-வியர்வைப் பெருக்கெடுக்க — காகிதங்கள் கணக்கின்றி வீணாக—முடிவில் அந்த 'சூரர்'களுக்கு கணக்குக்கு விடை என்னவோ கிடைக்காது; மூளைதான 'குழம்பி' விடுகிறதாம்! அத்தகை

★ 'நெப்போலியன் கணக்கு' ★

யோர் இந்த விசித்திர நிகழ்ச்சியைப் படிக்கட்டும்:

பாரிஸ் பள்ளி ஒன்று: வகுப்பறை: ஆசிரியர் கணக்கு ஒன்று கொடுத்துவிட்டார். ஆனால் விடை தேடிய மாணவர்களோ தடுமாறிப் போனார்கள் அத்தனை பேரும் முயன்று முயனறு பார்ததனர்; பலன் என்னவோ '0'தான்!

ஆனால் ஒரே ஒரு மாணவன் மட்டும் 'விட்டேனா பார்!' என்று உட்கார்ந்து விட்டான் எழுந்திருக்கவே யில்லை ஒரு மணியல்ல; இரண்டு மணியல்ல; மூர்ச்சைபோட்டு விடாதீர்கள், 72 மணி நேரம் முயர்ச்சித்தான். அவனுக்கு 'மூளை குழம்ப'வில்லை; என்ன ஆச்சரியம்; அவனுக்கு விடை கிடைத்துவிட்டது. குதூகலக் கூச்சலிட்டான்! ஆசிரியர் வியந்தார்; பாராட்டினார்! மற்ற மாணவர்கள் அவன் சாதனையைக் கண்டு வெட்கினர்.

அவர்கள் மட்டுமல்ல; என்றோ நடந்து—ஆனால் இன்றும் கேட்போரை வியககவைக்கும் அநத நிகழ்ச்சியை "நெப்போலியன் கணக்கு" என்கிறார்கள். ஆமாம்; அந்த அதிசய மாணவன் மாவீரன் நெப்போலியனேதான்!

கடைசிப் பக்கம்
'எழுத்தாணி'

இந்த வாரம் பரிசு பெறும்
தோழர்.

★ எஸ். டி. கதிரேசன்,
ஆர். எஸ். புரம்,
கோவை.

கோபாலசாமி; அயனாவரம்.

(?) நான் எந்தக் கட்சியையும் சேர்ந்தவனல்ல —என்று கூறு பவர்கள் யார்?

நிச்சயம் புதுமை விரும்பும் கட்சியில் சேரப் பயப்படுகிறவர்கள்தான்!

ஆர். செல்வராசு; வண்டிப்பாளையம்.

(?) பதவியிலிருக்கும் காங்கிரசை காந்த ஊசிக்கு ஒப்பிடலாமா?

உண்மைதான்; பத்தரைமாற்றுத் தங்கங்களைத் தொடாமல், துருப்பிடித்த இரும்புத்துண்டுகளை இழுக்கும் காந்த ஊசிதான் காங்கிரஸ்!

எம். நடராசன்; கோவை.

(?) ஆட்சி பீடத்துக்கும், பலிபீடத்துக்கும் உள்ள வித்தியாசம் என்ன?

ஆச்சாரியாரைப் பொறுத்தவரையில் இரண்டுக்கும் அதிக வித்தியாசமில்லை.

இரா. அ. பழனிச்சாமி; இராஜபாளையம்.

(?) ஜார் மன்னனின் வாரிசு யார்?

முதலாளித்துவ முதலைகளும், அவர்கள் ஆணைப்படி ஆடும் ஏகாதிபத்ய எடுபிடிகளும் ஜாருடைய வாரிசன்றிப் பின் யாருடைய வாரிசு?

தமிழ் மன்னன்; மடத்துப்பட்டி.

(?) மந்திரி சுப்பிரமணியத்துக்கும், கடவுள் சுப்பிரமணியத்துக்கும் உள்ள ஒற்றுமை என்ன?

இருவருக்கும் இரு மனைவிகள் உண்டு; ஒருத்தி 'தட்சிணப் பிரதேசம்'; இன்னொருத்தி 'தர்ப்பைப்புல'!

சோமசுந்தரம்; ஆவடி.

(?) ஆவடி மாநாட்டில் தயாரானது போல திருச்சி மாநாட்டில் ஆயிரக் கணக்கில் இட்டிலிகள் தயாராகுமா?

இட்லிகள் தயாராகாது; ஆயிரமாயிரம் இலட்சிய வீரர்கள் தயாராவார்கள்!

கே. பி. சாமிநாதன்; ஊத்துக்குளி.

(?) உங்கள் மாநாட்டை நேரு பார்த்தால் என்ன நினைப்பார்?

சீக்கியர்கள் ஊர்வலம் அமிர்தசரஸ் மாநாட்டைக் கடந்து செல்ல ஐந்து மணி நேரம் ஆயிற்று; இவர்கள் ஊர்வலம் கடந்து செல்ல ஐம்பது மணி நேரமாகுமே!—என்று நினைத்தபடி மூக்கின்மேல் விரலை வைப்பார்!

★ எஸ். டி. கதிரேசன்; கோவை.

(?) திருச்சி மாநாடு கூடும் இடத்தில் முன் யோசனையுடன் காமராசர் ஒரு அணுகுண்டைப் போடுவாரானால், பிற்காலத்தில் திராவிட நாட்டுப் பிரச்சினை எழாதவாறு தடுத்துவிடலாமல்லவா?

கனவிலும் முடியாது, தோழரே! காமராசர் நாளை திருமணம் செய்து கொண்டு, அவருக்கும் ஒரு குழந்தை பிறக்குமானால், அந்த சிசுகூட 'திராவிட நாடு திராவிடருக்கே'—என்ற முழக்கத்தோடுதான் வாழ்க்கைப் பயணத்தைத் துவங்கும் என்பதை நினைவில் நிறுத்துங்கள். காரணம் வருங்கால சந்ததிகள் எங்களைச் சேர்ந்தவர்கள்!

கே. எம். எஸ். பாட்சா; சேலம் டவுன்.

(?) அவர்கள் மாநாட்டிற்கு டிட்டோ வந்ததைப்போல உங்கள் மகாநாட்டிற்கும் யாராவது விசேஷப் பார்வையாளர்கள் வருவார்களா?

வருவார்கள். டிட்டோக்கள் அல்ல; கற்றுடைப் பகதர்கள்! ஆனால் அவர்கள் திரும்பும்போது தீவிர திராவிட முன்னணி வீரர்களாகத் திரும்புவார்கள்!

பி. சுந்தரேசன்; மானூர்.

(?) திருச்சி மாநாட்டுக்கு உங்களில் யாராவது போகாமலிருப்பீர்களா?

எப்படிப் போகாமலிருப்போம்; இதுதானே எங்களுக்குத் 'தலை தீபாவளி'!

(?) உமது கழகத் தோழர்களுக்கு போர்ப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறதா?

சொற்போர் பயிற்சி தரப்பட்டு வருகிறது; நாங்கள் உண்மையான அகிம்சாவாதிகளாக இருப்பதால் மற்போர் பயிற்சிக்கு முக்கியத்துவம் தரவில்லை.

எஸ். கே. மணிமேகலை; செருகடம்பூர்.

(?) உலக சமாதானம் எப்போது கிட்டும்?

சம்பந்தப்படாத நாட்டவர்கள் வாயைப் பொத்திக் கொண்டு இருக்கும்போது!

அண்ணா உணவு விடுதி

பந்தயத்திடல் : : திருச்சிராப்பள்ளி.

திருச்சி பந்தயத் திடலில் மே மாதம் 17, 18, 19, 20ந் தேதிகளில் நடைபெறும் தி. மு. க. 2-வது மாநில மாநாட்டின் முகப்பு வாயிலுக்கு எதிர்புறம் அமைந்திருக்கும் **"அண்ணா உணவு விடுதி"யில்** *ருசி மிக்க உணவுகளும், கோடைக்கு குளிர்ச்சி தரும் பானங்களும், சிறந்த முறையில் துரிதமாகக் கிடைக்க வசதிகள் செய்துள்ளோமென்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம். வணக்கம்.*

நிர்வாகி: வி. மாணிக்கம்.

★ ★ ★

மாநாட்டுப் பந்தலில் கிடைக்கும்!

நாடக நூல்கள்

கண்ணதாசன் எழுதியது

ராஜ தண்டனை

மெல்லத் தவழ்ந்து மென்காற்றில் மிதந்து வரும் தென்றல் நடை நாடகக் கருவூலம் ...ரூ. 2 0 0

தென்னரசு எழுதியவை

சந்தன மழை

புத்தன் சரிதம் — புதிய கண்ணோட்டம்— புதுவெள்ளத் தமிழோட்டம்— ...ரூ. 1 0 0

தேவாலயம்

நிகழ்ச்சிப் பின்னல் — புதியதோர் பாதையில் எழுதப்பட்ட நாடகம். ...ரூ. 1 4 0

இவை மூன்றும் அருணோதயம் வெளியீடுகள்!

அருணோதயம், சென்னை-14.

★ ○ ★

மாநில மாநாடு

★

அழகிரி உணவு விடுதி

○

மாநில மாநாட்டிற்கு வருகை தரும் பொது மக்களுக்கு மிகவும் வசதியாகவும், நேர்த்தியாகவும் உணவு அளிக்கும் ஏற்பாட்டினை ராபி குழுவினர் மேற்கொண்டுள்ளனர்.

மாநாட்டுப் பந்தலையடுத்து இந்த உணவு விடுதி அமைக்கப்பட்டிருக்கிறது.

மாநாட்டிற்கு வருகை தரும் பொதுமக்கள் அழகிரி உணவு விடுதியில் ருசியான உணவினை மேற்கொள்ளலாம்.

ஆசிரியரும், அச்சிடுபவரும், வெளியிடுபவரும் மு. கருணாநிதி, 'முரசொலி' அச்சகம், 4/128, மவுண்ட் ரோடு, சென்னை-6